கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)
மலர்: 97 இதழ்: 17
வைகாசி 6 — 1972
பிரதி சதம் 15

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

# வட அயர்லாந்து நிலைமை சீரடையும் அறிகுறிகள்

சென்ற இரு வாரங்களில் வட அயர்லாந்தில் ஐ ஆர். ஏ. தலைவர்களில் ஒருவராகிய திரு. ஜோசவ் மக்கான் என்பவர் ஆங்கில இராணுவத்தின் ஒருவரால் நிற்பாட்டப்பட்டபொழுது தடையை மீறிச் சென்றதற்காக அத்தலத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டதன் விளைவாக நடைபெற்ற சிறு சம்பவங்களைத்தவிர பாரதூரமான விஷயங்கள் மிகக்குறைவாகவே வெளிவந்திருக்கின்றன. ஐ. ஆர். ஏ. தனக்கு ஆதரவு குன்றி வருகின்றதென்னும் உண்மையை மூடிமறைக்க பகிரத முயற்சிகள் செய்து வருகின்றது. சமாதானத்தையே தாம் விரும்புவதாகக் கத்தோலிக்க தலைவர்கள் வெட்டவெளியாகப் பயமின்றிக்கூறி வருகின்றனர். வட அயர்லாந்துப் பரிபாலனத்துக்குப் பொறுப்பாயிருக்கும் ஆங்கில அரசாங்கமும் பொருளாதார ரீதியில் நீதி செலுத்த வழிவகைகள் தேடி வருகின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க புதிய கப்பல்கள்கட்டும் நிறுவனம் ஒன்றை நிலைநாட்டி பல கோடி பவுண் செலவில் வேலைகளைத் தொடங்கியிருப்பது மாத்திரமல்லாமல், கத்தோலிக்க தொழிலாளருக்கும் நீதிவழங்கும் பான்மையில் எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களை வேலையில் அமர்த்தவும், நடப்பிக்கவும் வல்லுனராகிய நோர்வே விற்பன்னரை நிர்வாகத் தலைமையில் அமர்த்தியிருக்கின்றது.

## கருவைநீக்கமுயலாத தாய்மாருக்கு உதவி

கருவை நீக்கி, உயிர்க்கொலை புரிய உடன்தையாயிராது தேவசித்தத்துக்குப் பணிந்து பிள்ளையைப் பெற்றெடுக்க உதவிகோரும் தம் பிரிவிலுள்ள எந்தத் தாய்க்கும் தம்மாலான பண உதவியோ, அவர்கள் விரும்பும் சமூகசேவா உதவிகளோ புரிய ஆங்கில நாட்டு சுறாஸ்பரி பிரிவு மேற்றிராணியாராகிய சலசார் அடிகளார் முன்வந்திருக்கின்றார். இந்த உதவியை கத்தோலிக்கராயினும் பிறமதத்தவராயினும் பெற்றுக்கொள்ளலாமென அவர் அறிவித்திருக்கின்றார்.

# கத்தோலிக்க விசாரணைப் பங்கின் அரிய சாதனை

றோட்டறிகிளப்பின் அனுசரணையுடன் நுவரெலி விசாரணைப்பங்கு அப்பகுதியில் இல்லிடமற்ற மக்களுக்கு ஏறக்குறைய நூறு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதில் வெற்றிகண்டிருக்கிறது. ஏற்கனவே அது 42வீடுகள் கட்டிக் கொடுத்தது. சென்ற வருடத்தில் மற்றும் 50வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றது. இந்தவீடுகளைக் கையளிக்கும் வைபவம் சமீபத்தில் நடைபெற்றபோது றோட்டறிகிளப் 50 ரூபா வெகுமதிகளை அளித்திருக்கிறது.

(1) தனது வீட்டைப் பெற்றுக் கொண்டபின் மற்றவர்களும் தங்கள் வீடுகளைக் கட்டிக்கொள்ள உதவிசெய்யுமுகமாக ஒரு வருடமும் இரண்டு மாதமும் வேலை செய்த ஒரு வீட்டுப் பெண்ணுக்கும், (2) ஒழுங்காக வேலை செய்து தச்சுத்தொழிலைப் பயின்று கொண்ட 19வயதுடைய ஒரு இளைஞருக்கும், (3) இந்த வீட்டுத் திட்டத்திற்கு உதவி செய்யுமுகமாகப் பாடசாலை விடுமுறைகள் வந்தபோதெல்லாம் தனது பிள்ளைகளைக் கொண்டு வந்து வேலை செய்வித்த ஒரு தாய்க்கும், (4) சென்ற வருடம் தான் ஒரு வீடு பெறப்போவதில்லையென நன்கு அறிந்திருந்தும் இவ்வருடமாவது ஒரு வீடு கிடைக்குமென எதிர்பார்த்து அவ்வருடமுழுவதிலும் வேலைசெய்த ஒரு வீட்டுப் பெண்ணுக்கும் இந்த ஐம்பது ரூபா வெகுமதிகள் வழங்கப்படலாயின.

இவ்வருடம் கட்டப்படும் வீடுகளிலே 50குடும்பங்கள் வேலை செய்யத் தொடங்கியிருக்கின்றன. இதுவரை சிரமதானமூலம் 80வீடுகளைக் கட்டுவதற்கான இடங்களை அவர்கள் ஏற்கனவே செம்மைப்படுத்தி யிருக்கிறார்கள். ஏறக்குறையப் 12வீடுகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுவிட்டன.

## இளைஞர் ஏன் குடிக்கப் பழகுகின்றனர்

உலகில் பல பாகங்களிலும் குடிக்கப்பழகும் இளைஞரின் தொகை கூடிக்கொண்டு வருகின்றது. பெற்றோரின் கட்டுப்பாட்டுக்குள் நடப்பதற்குப் பெயர்பெற்ற கத்தோலிக்க அயர்லாந்திலேயும் நிலைமை இப்படியே. அங்கு வண. லேகொக் சுவாமியார் அண்மையில் நடத்திய புள்ளி விபரக்கணக்கின்படி 14வயதுக்கும் 18வயதுக்குமிடையிலுள்ள இளைஞர் மத்தியிலேயே இத்தொகை கூடிக்கொண்டு வருகின்றது. குடிப்பழக்கத்தினாலும், புகைக்கும் பழக்கத்தினாலும் வரும்கெடுதிகளை பள்ளிக்கூட காலத்திலேயே வகுப்புகளில் மாணவ மாணவிகளின் மனதில் ஆழப்பதிப்பதே இதற்கு பரிகாரமெனக் குருவானவர் அபிப்பிராயப்படுகின்றார். மதுபானம் அருந்தாதும் புகைக்காதும் விடுபவர் சமூகபழக்கவழக்கமற்றவரெனக் கருதப்படுகின்றனர் என்பதற்காகவே இளைஞர் இதில் ஆரம்பத்தில் ஈடுபட்டுப் பின்பு அதிற்சிக்கி அல்லற்படுகின்றனர்.

## ஆங்கிலமாது கத்தோலிக்கரானார்

பெண்களின் உரிமைக்குப் போராடுவதில் ஆங்கில நாட்டில் பலவருடகாலமாக முன்னணியில் நின்றுவரும் கல்னவீர் ரில்னி என்னும் ஆங்கில மாது சென்றவாரம் வெஸ்மினிஸ்ரர் மகாதேவாலயத்தில் திருமுழுக்குப் பெற்றுக் கத்தோலிக்கராயினர். ஆங்கிலநாட்டில் வவர்ட என்னும் பாராளுமன்ற தொகுதிப் பிரதிநிதியாகிய திரு. ஜோண் ரில்னி என்பவரின் பாரியார் இவர். இருவருடங்களுக்கு முன் ஐக்கிய நாட்டுஸ்தாபனத்தில் நடைபெற்ற பெண்கள் நிலைமை விசாரணையில் ஆங்கிலநாட்டுப் பெண்களின் பிரதிநிதியாகப் பங்குபெற்றவர். 1968 தொடக்கம் 1972 வரையும் ஆங்கில பெண்கள் தேசியசங்கத்தின் தலைவருமாவர். இவருடைய சிரேஷ்ட புத்திரனும் இருவருடங்களுக்குமுன் கத்தோலிக்க மறையிற் சேர்ந்து கொண்டார். கத்தோலிக்கராகத் தாம் சேர்ந்து கொண்டதுபற்றிக் கத்தோலிக்கரல்லாத அவரது கணவனும் மிக மகிழ்ச்சி கொண்டிருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

# மாபெரும் மறைக்கல்வி விழா—1972

## திரித்துவ ஞாயிறன்று வைகாசித்திங்கள் 28ஆம் நாள்

ஆமாம், மாபெரும் மகத்தான விழா. இவ்விழா இவ்வருடம் பலவகையான ஆயத்த நிகழ்ச்சிகளை, சமூக தொடர்பு சாதனங்கள்மூலம் நிறைவுசெய்து, மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட விருக்கின்றது. இவ்விழாவில் பங்குகொண்டு பயனடையுமாறு நம்நாட்டு மக்களாகிய உங்கள் அனைவரையும் அன்புக் கரம்கூப்பி யாழ். மறைக்கல்வி நடுநிலையம் அழைக்கின்றது.

இவ்விழாவின் அடிப்படைக் கொள்கையாதெனில், "குடும்பம் கிறீஸ்தவ உருவாக்கலின் தொட்டில்." இக்கொள்கையை, இந் நன்நோக்கைப் பாருக்கும், அதற்குமுன் நம் ஈழத்திற்கும் பறைசாற்றும் நோக்குடனேயே நம் நாட்டு மறைக்கல்வி நடுநிலையங்கள் முன்வந்துள்ளன.

### விழா ஆயத்த நிகழ்ச்சிகள்

1. வானொலிமூலம்:

(1) விழாவின் அடிப்படைக்கொள்கைபற்றிய அரைமணிநேர நிகழ்ச்சி.

(2) விழாதின நல்லாசியுரை, அன்றைய தினம் மகாவந்.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் வழங்கப்படும்.

'கேளுங்கள் பயனடைவீர்கள்'

2. அச்சகமூலம்:

வைகாசித் திங்கள் 27-ம் நாள் வெளியாகும் "பாதுகாவலன்" மறைக்கல்வித் தின சிறப்புமலராகி கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இன்னும் பல அம்சங்களைத் தாங்கியவண்ணம் உங்கள் கரங்களில் தவழ இருக்கின்றான்.

'படியுங்கள் பயனடைவீர்கள்'

எங்கள் கொள்கையின் சிறப்புப்பற்றி உங்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து அபிப்பிராயங்களை வரவேற்கிறோம். தகுதியானவற்றைப் பிரசுரிக்கவும் முன்வந்துள்ளோம். (உ+ம்) பங்குக்குரவர், ஆசிரியர், (இல்லற—துறவற) வேலைபார்க்கும் பெண், பல்கலைக்கழக மாணவர், தோட்டத் தொழிலாளி, ஆலைத் தொழிலாளி, தொழிற்சங்கத் தலைவர், மகாவித்தியாலய மாண்வர், பிரத்தியேகபாடசாலை மாணவர், தோட்டப் பாடசாலை மாணவர், குடும்பத் தலைவி இன்னும் பலரது அபிப்பிராயமும் வரவேற்கப்படும்.

● மறந்திடாதீர்: உங்கள் எண்ணங்கள் சிந்தனைகள் எல்லாம் எங்கள் கொள்கையின் பக்கமே இருந்து, மக்கள் மனதைக் கவர்ந்தொளிரட்டும். ஒவ்வொரு நிலையினரும் தத்தம் வாழ்க்கையுடன் கொள்கையைத் தொடர்புபடுத்துங்கள். இவைகள் கவிதை உருவிலோ, கட்டுரைஉருவிலே அமையலாம்.

**இன்றே எழுதுங்கள்**
**தொடர்பு கொள்ளுங்கள்**

முகவரி:

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்நகர்.

* * *

3. சுவரொட்டிப் போட்டி:

விழாவின் அடிப்படைக் கொள்கையை விளக்கும்வண்ணம் சொற்களாலோ அன்றேல் வரைதலாலோ ஏற்றதொரு சுவரொட்டியின் மாதிரி ஒன்று தயாரித்து அனுப்புங்கள். போட்டி முடிவுகளை 13-5-72-க்கு முன்னதாக அனுப்புங்கள்.

பரிசில்களைப்
பறிபோக விடாதீர்கள்;
தாமதம்பண்ணாதீர்கள்

4. பேச்சுப் போட்டி:

"குடும்பம் கிறீஸ்தவ உருவாக்கலின் தொட்டில்" என்னும் கொள்கைபற்றியது. இவை பாடசாலைரீதியில் இடம்பெறும். ஆசிரியர்களே! நல்ல பேச்சாளர்களை உருவாக்கி, அவர்களை ஊக்குவியுங்கள்.

இறுதிப்போட்டி
இறுதிவிழாவில் இடம்பெறும்.

5. கட்டுரைப் போட்டி:

ஈழமணித் திருநாட்டின் எழுத்தாளப் பெருமக்களே! உங்கள் எழுத்துவன்மைக்கோர் சவால்!! எங்கே சமாளியுங்கள்!!! எங்கள் அடிப்படைக்கொள்கைபற்றிய உங்கள் சிந்தனையை எழுத்துருவில் ஒரு 'புள்ஸ்காப்'தாளில் எழுதி அனுப்புங்கள். தாமதம் செய்யாதீர். வாலிபர்களே! யுவதிகளே!! கடவுளின் கொடையை வீணே சிதறடிக்காதீர். நீங்களும் பங்குகொள்ளுங்கள்.

முடிவு தேதி: 20-5-72.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## "யூனிவேர்ஸ்" பத்திரிகையின் புதிய ஆசிரியர்

ஆங்கில நாட்டிலிருந்து வெளிவரும் பிரதான கத்தோலிக்க பத்திரிகைகளில் "யூனிவேர்ஸ்" பத்திரிகை முன்னணியில் உள்ளது. இப்பத்திரிகைக்கு ஆசிரியராக 43 வயது நிரம்பிய பிரசித்தி பெற்ற இல்லறத் தொண்டரும், அந்நாட்டின் பொதுத் தொடர்பு சாதனங்களாகிய பத்திரிகை, வானொலி தொலைக்காட்சியாதியாந் துறைகளில் விற்பனரெனக் கீர்த்தி பெற்றவருமான திரு. ரெறன்ஸ் வின் என்பவர் நியமனம் பெற்றிருக்கின்றார். இவ்வருடம் ஆடிமாதம் 1-ம் திகதியுடன் அவர் யூனிவேர்ஸ் பத்திரிகையின் ஆசிரியபதவியில் அமர்த்தப்படுவார். இப்போது ஆசிரியராகத் தொண்டு செய்துவரும் திரு. கிறிஸ்தோப்பர் ஹௌன்சி என்பவர் 15வருடகாலமாக ஆசிரியராகச் செய்து வந்த அரும் பெரும் சேவைக்கு ஆங்கிலம் பேசும் கத்தோலிக்கரும் பிறரும் பெரிதும் கடமைப்பாடுள்ளவர்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலையங்கம்

தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதிபெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்யவேண்டியிருப்பதாலும், அவ்வதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது கஷ்டமாயிருப்பதாலும் சிலவாரங்களுக்கு ஆசிரிய தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**சத்தியவேத பாதுகாவலன்**

# மாதாவின் மகத்துவம்

"மதுரமும், புனிதமும் பொருந்திய கன்னிமரியாளிடம் கத்தோலிக்கர் கொண்டுள்ள விசுவாசத்தைக் கண்டு நான் என்றும் பொறாமைப்பட் டிருக்கிறேன். ஏனெனில், அவள் இறைவனுக்கும், மக்களுக்கும் இடையேநின்று, அவரது தாங்கொணு மகிமையை இடையிலேற்று, அதேவேளையில் ஒரு பெண்ணின் கனிவின்மூலம் மனிதருடைய புத்திக்கு எட்டக்கூடிய விதமாக இறைவனின் அன்பைப் பக்தர்கள் மீது பொழியச்செய்கின்றாள்" என்று நத்தனியல் ஹாதோன் என்னும் பிறமத அறிஞர்ஒருவர் கூறினர். கத்தோலிக்கரின் விசுவாசத்துக்கு மரியாயின் பக்தி உயிர்நாடி போன்றது. இதை எந்தப்பாவியும் உணராதிருக்க முடியாது. ஆனல், இறைவனின் புகழுக்கும் எமது ஈடேற்றத்துக்கும் பயன்படக்கூடிய விதத்தில் இப்பக்தி எத்தகைய உருஎடுக்க வேண்டும் என்பதை ஆராய்வோம்.

பரிசுத்த மரியாயின் மீதுள்ள பக்தி மூன்றுவகையில் வெளிப்படுகின்றது. நாம் மாதாவை நேசிக்கிறோம்; நாம் அவளை வணங்குகிறோம்; நாம் அவளைக் கண்டுபாவிக்கிறோம். மரியாயின் உண்மை அடியார் ஒவ்வொருவரும் இந்தமூன்று கடமைகளையும் நிறைவேற்றுவதன்மூலம் தமது பக்தியைக் காட்டுகிறார்கள்.

சகல புனிதர்களும் மரியாயைத் தமது தாயாகக்கருதி, தமது இன்னல்களிலெல்லாம் அவளது துணையை நாடினர். ஒரு நோயாளியைக் குணப்படுத்துமாறு புனித கப்பேட்டினே சூசையப்பரைக் கேட்டபோது அவர் கூறியது: "உங்கள் தாயாகிய மரியாயிடம் போங்கள்; நம்பிக்கையோடு அவளிடம் இந்த உதவியைக் கோருங்கள்; அவள் நிச்சயமாகக் குணமளிப்பாள்." அவரது இந்த அறிவுரையைப் பின்பற்றி நாம் சகாயங்களைப் பெறவேண்டியும், எம்மை வழிநடத்தி, எமக்கு ஆறுதலும் காவலும் அளிக்கும்படியும் தேவதாயாரிடம் செல்வோமாக.

மாதாவின் இதயத்தைத் தொடும் பக்திமுயற்சிகளில் எளிமையானதும் வல்லமை மிக்கதுமானது செபமாலைப் பக்தி மரியாயின் அருட்களஞ்சியத்தைத் திறக்கும் திறவுகோலாக இது விளங்குகிறது.

மாதாவின் ஆசியைப்பெற நாம் செய்யக்கூடிய நற்செயல்கள் இன்னும் எத்தனையோ உண்டு. மாதாவின் பெயரால் பூசைப்பலி ஒப்புக்கொடுப்பது, தானதருமங்கள் செய்வது, உபவாசமிருப்பது, அவளுடைய திருத்தலங்களுக்கு யாத்திரை செய்வது, மாதாவின் திருக்கூட்டத்திற் சேர்ந்து சனிக்கிழமைப் பக்தியை அனுசரிப்பது. மரியாயின் சேனையில் ஊழியம் புரிவது, சதாசகாயமாதா நோவினைகளிற் பங்கு பற்றுவது, புதுமை வரவணிக்கம், உத்தரீயம் முதலியவற்றை அணிவது—இன்னும் எத்தனையோ.

தன் பெயரால் செய்த எதையும் மாதா மறக்கப்போவதில்லை. விரைவிலேயே அதைப் பன்மடங்காக எமக்குத் திருப்பித் தருவாள். நாம் கேட்காமலே அவள் எமக்குச் செய்த நன்மைகள் அற்புதமானவை. நாம் கேட்டுப் பெற்றுக்கொண்டவை அதைவிட அற்புதமானவை. ஆனல், நம்பிக்கையுடனும் உருக்கத்துடனும் நாம் செய்யும் வேண்டுதல்களுக்கு அவள் செய்யக்கூடிய, செய்யப் போகின்ற நன்மைகள் எல்லாவற்றையும்விட மகத்தானவை.

# கற்றதினுலாய பயன் காண.....

இன்று கல்வியுலகில் கணக்கிலடங்கா மாற்றங்கள், மறுமலர்ச்சிகள். "மாணவர்தம் தரம் உயர்ந்தால் மானிலத்தின் தரம் உயரும்" என்னும் மணிமொழி எண்ணி ஆய்தற்குரியது. இன்றைய மாணவர்களே நாளைய உலகின் ஆற்றல்மிக்க தலைவர்களும் பொறுப்புள்ள குடிமக்களுமாவர். உலகியல் கல்வியைப்பொறுத்தவரையில் இப்படியாயின், இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும திருமறைக் கல்வியைப்பற்றி எத்துணை சிந்திக்க வேண்டியது.

ஈழத்திருநாட்டில் இன்று அரசியலாரும், அறிஞர்களும் மறை அறிவின்— மறைக்கல்வியின் இன்றியமையாமையை உணர்ந்துவருகின்றனர். மறைவாழ்வின் அடிப்படையின்றி மாணவர்தம் கல்வியனைத்தும் வீண். திருச்சபை இவ்வுண்மையை உணர்ந்துள்ளது; உலகிற்கு உரைத்துள்ளது. கிறிஸ்தவ கல்விநிறுவனங்கள் மறைக்கல்வியில் மிகுந்த கவனம் காட்டிவந்துள்ளன. பள்ளிக்கூடங்கள் அரசினர் எடுத்ததும் நிலைமை மாறியது. மறைக்கல்வியின் தரம் குறைந்தது.

பெற்றோரும் தங்கள் பிள்ளைகளின் மறைப்பயிற்சியில் — கிறீஸ்துவை உருவாக்குவதில் அக்கறையற்றவர்களாய் இருப்பது பெரிதும் வருந்தத்தக்கது. பெற்றோரின் இப்பெரும் பொறுப்பை ஈழத்து மறைஆயர்கள் மீண்டும் வற்புறுத்துகின்றனர். பெற்றோர் இயல்பிலேயே பிள்ளைகளின் முழுவளர்ச்சியிலும் பெரும் பங்கும் பிரிக்கமுடியாத கடமையும் உரிமையும் உள்ளவர்கள். வளர்ச்சிஎன்றால் உடல் மட்டுமன்று உள்ளமும், அறிவும் வளரவேண்டும். நம்பெற்றோர் மறைக்கல்வியில் பொறுப்பற்று இருப்பது பிள்ளைகளின் ஆன்மவளர்ச்சியில் பங்கெடுக்காமையையே குறிக்கும். தங்கள் பிள்ளைகள் பல்கலையும் கற்று, பாரோர் புகழ வேண்டுமென்று விரும்பும் பெற்றோர் மறைக்கல்வியிலும் அவர்கள் மாண்புறவேண்டுமென்று விரும்புதலே சாலச்சிறப்புடையது. "கற்றதினுலாய பயன் கடவுள் அடிதொழுதலே."

இவ்வுண்மைகளை எடுத்துக்கூறவும் பெற்றோருக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கவும் ஈழத்து மறை ஆயர்கள் ஆண்டுதோறும் திரித்துவ ஞாயிறன்று மறைக்கல்வி விழாவை கொண்டாடுமாறு பணித்துள்ளார்கள். இவ்வாண்டு இவ்விழா வைகாசித்திங்கள் 28-ம் நாள் ஈழமெங்கும் கொண்டாடப்படும்.

ஆயர்கள் குறித்தநாளிலோ அல்லது அதனைத் தொடர்ந்துவரும் கிழமையிலோ இவ்விழா கொண்டாடப் படலாம். எல்லாப்பங்கிலும் பள்ளிக்கூடங்களிலும் இவ்விழா கொண்டாடப்படல் ஏற்ற மிகும் செயலாகும். பங்குத் தந்தையரும் பள்ளித் தலைவர்களும் இதற்காவன செய்வார்களாக.

யாழ். மறைக்கல்வி நடுநிலையம் இவ்விழாவைப் பெரிய கோவில் திறந்தவெளியரங்கில் கொண்டாட முன்வந்துள்ளது. இவ்விழாவை முன்னிட்டு கலைநிகழ்ச்சி ஒன்று நடாத்தப்படும். பங்குபற்றுவோர் நடுநிலையத்துடன் கூடிய விரைவில் தொடர்புகொள்ளவும்.

இயக்குனர்,
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

## ஆசிரியர் ஞானொடுக்கம் (ஆண்-பெண்)

**(மன்னர்-வவுனியா-முல்லைத்தீவு)**

காலம்: **19-5-72** வெள்ளிக்கிழமை பிற்பகல் 5-30 மணி முதல்,

**21-5-72** ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-00 மணி வரை.

இடம்: மடுக்கோவில்:

போதகர்: அருட்திரு சி; யோ: இம்மனுவேல் அடிகளார்:

இறைவன் அளித்த இவ்வரிய தருணத்தைப் பயன்படுத்த விரும்பும் கத்தோலிக்க ஆசிரியர்கள் நேரடியாகவோ, அல்லது தங்கள் பள்ளி முதல்வர்கள் வழியாகவோ மன்னர் பங்குத் தந்தை அருட்திரு சந்திராப்பிள்ளை அடிகளார்க்கு அறிவிக்கும்படி வேண்டுகிறோம். பள்ளி முதல்வர்கள் தயவுகூர்ந்து எம்முடன் ஒத்துழைக்கவும்:

(ஞானொடுக்க செலவுக்காகச் சிறுதொகை கொடுக்க வேண்டி வரும்):

இவண்,
அருட்திரு ஜி: ஏ: பாலசுந்தரம், மா: ம. தி.,
மறைக்கல்வி ஆலோசகர்,
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம், 2-5-72:

## பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் பதவியிலிருந்து ஓய்வுபெறுவாரா?

பரி. தந்தை 6வது சின்னப்பபாப்பரசர் பிறந்து இவ்வருடம் புரட்டாசி மாதம் 75 வருடம் நிறைவு பெறுகின்றமையால் அவர் தமது பதவியிலிருந்து அத்திகதியுடன் ஓய்வுபெற்றுக் கொள்ளுவார் என்ற கதை மீளவும் உலாவி வருகின்றது. இக்கதையில் உண்மையுண்டு என்பதை நம்பத்தக்க ஆதாரம் எதுவுமில்லை. அண்மையில் வெளிவந்த ஒரு இத்தாலிய பத்திரிகையில் 6 வருடங்களுக்கு முன் 6வது சின்னப்ப பாப்பரசர் சில நாற்றாண்டுகளுக்கு முன் இறந்துபோன 5வது செலஸ்தீனர் பாப்பரசரது கல்லறையைத் தரிசித்துப் பிரார்த்தித்தார் என்னும் சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு, உலக சரித்திரத்திலே தம் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற ஒரேயொரு பாப்பரசராகிய 5வது செலஸ்தீனர் கல்லறையைச் சின்னப்ப பாப்பரசர் தாமும் ஓய்வுபெறக் கொண்டுள்ள எண்ணமே தரிசிக்க ஊக்குவித்தது என்று குறிப்பிட்டிருந்தது. இக்குறிப்பை வத்திக்கான் உயர் அதிகாரியொருவர் "உயர்ந்த கற்பனை" யென வர்ணித்திருக்கின்றார்.

## மாபெரும் மறைக் ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

**உங்கள் ஆற்றலை எமக்கும் காட்டுங்கள்**

**6. கேள்வி பதில்:**

**7. குறுக்கெழுத்துப் போட்டி:**

இவைகள்பற்றிய விபரம் அடுத்த இதழில் பிரசுரமாகும். மேலும், பாடசாலை ஆசிரியர்களே விழாதினத்திற்கு நீங்களும் ஒத்துழைப்பு நல்கி, எமது கொள்கைக்கு மெருகூட்டும்வண்ணம் நடனங்கள், நாடகங்களையும் வேறுசிறந்த பாடல்களையும் உருவாக்குங்கள்.

**8. பங்குக் கோவில்கள்:**

(1) இத்தினத்தன்று நாடெங்குமுள்ள ஆலயங்களில் விசேஷ விவிலிய வழிபாடு நடாத்தப்படும்.

(2) அன்று சகல மேற்றிராசன பங்குகளிலும் சேர்க்கப்படும் பணம் மறைக்கல்வி அப்போஸ்தலிக்க பணிக்குப் பயன்படுத்தப் படும்.

விழாவின் நிகழ்ச்சி நிரல் பின்னர் வெளியாகும்.

## பூசை வழிகாட்டி

**வைகாசி—1972.**

7. ஞாயிறு: பாஸ்கா காலத்தில் 6-ம் ஞா. [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 8: 5—8, 14—17
1இரா. 3: 15—18, அரு. 14: 15—21

8. திங்கள்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 16: 22—34
அரு. 16: 5—11

9. செவ்வாய்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 16: 22—34
அரு. 16: 5—11

10. புதன்: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 17: 15, 22—18: 1
அரு. 16: 12—15

11. வியாழன்: ஆண்டவரின் விண்ணேற். [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 1: 1—11
எபே. 1: 17—23, மத். 28: 16—20

12. வெள்ளி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 18: 9—18
அரு. 16: 20—23

13. சனி: நாட்பூசை [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 18: 23—28
அரு. 16: 23—28

14. ஞாயிறு: பாஸ்கா காலத்தில் 7-ம் ஞா. [வெ]
**வாசகங்கள்:** அப். பணி 1: 12—14
1இரா. 4: 13—16, அரு. 17: 1—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு

**அன்புச் சோதரரே!**

வனப்புமிகு வைகாசி மலர்ந்துவிட்டது. வைகாசி எங்கும் வையத்தில் ஒரே வனப்பு. பசுந்தளிரும் இளந் துளிரும் பரப்பி புதுக்கோலத்துடன் காட்சியளிக்கும் மரங்கள். கொடியிலும் கொம்பரிலும் கொத்துக் கொத் தாய் பூத்துக் குலுங்கும் மலரினங்கள். வையமதில் வனப்பு—மனதிலே ரம்மியம். அமலமரிக்கு அஞ்சலி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்ட மாதம் வைகாசி. பாமாலையும், பூமாலையும் சூடி அவனியில் அன்னைபுகழ் பாடுவோம்.

நிற்க, உங்களில் பலரும் பரீட்சை எழுதிவிட்டு முடி வுகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பரீட்சை முடிவுகள் வெற்றியாயும் இருக்கும்; சில வேளை தோல்வியாயும் இருக்கும். தோல்வியைக் கண்டு துணிவை இழந்துவிட வேண்டாம். தோல்வியே வெற்றியின் தூண் என்பதை மறந்து விடவேண்டாம். மீண்டும் முயற்சியுங் கள். வெற்றி உங்களதே.

சோதரன்

## நூற்றாண்டு காலம் வாழ்க!

அண்மையில் யாழ். மேற்றிராசனத்தின் கரம்பன், நெடுந்தீவு, வவுனியா, இளவாலை ஆகிய பகுதிகளில் இருந்து இறைவன் திராட்சத் தோட்டத்தில் பணிபுரிய நான்கு இள வல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இவர்கள் நூறாண்டு காலம் வாழ்ந்து பணியாற்ற இளைஞர் உலகு இறைவனை வேண்டி நிற்கிறது.

—இளைஞன்.

**கவிதை அரங்கம்**

## கேலிக்கையாக்கியது நீங்கள்......
## வாடிக்கையாக்கியது நாங்கள்.....

கண்டது கண்கள் காவலனை—அது
கொண்டது கோபம் கவிதையின் மேல்
கண்டதைக் கக்கினால் கவிதையோ—நாம்
மண்டுகள் என்ற மமதையோ.

●

பெண்ணை மறைக்கின்றோம் தாணினால்—நம்
கண்ணை மறைக்கின்றோம் கதவினால்
பண்ணைப்பாடி வேண்டுங்கள்—நாம்
மண்ணைப்பார்த்து வேண்டுகின்றோம்.

●

விரைந்திட முற்றலில் நிற்பதில்லை—மனம்
கரைந்திட நிற்கின்றோம் முற்றலிலே
ரம்பையர் கூட்டத்தில் நின்றால்—மனம்
ரம்பமாய் அறுக்குதே சிந்தனையை.

●

புதுப் புதுத் துணியால் புனிதர் எம்மை
புதுப் புது உலகிற்கு அனுப்புவதேன்
முந்தி உம் கண்ணைப் பார்த்து
பிந்தி எம் கண்ணைப்பாரீர்.

●

முதல் நாள் விளிப்பினால்
விழிகள் அங்கு மயங்கவில்லை—கயல்
விழிகள் அங்கு ஆடுவதினால்—எம்
விழியை தாழ்த்திச் செபிக்கின்றோம்.

●

சோலைக் குயில்கள் கூவும் போது—நாம்
மாலை உருட்டல் தப்பாச்சோ
சாலையோரம் மூடவன் போக
காலை வாரி விடுவது ஏன்........

●

நாட்டியக் குதிரையை பார்ப்பது—நம்
நாட்டில் உள்ள வழக்கம் தானே—நீங்க
காட்டத்தானே வாரீங்க—நாம்
கண்டால் அது எம் தப்போ

●

உங்கள் தொடையை மறைக்கத்தானே
பேப்பர் கொண்டு வருகின்றோம்—எம்
மனதைத் திருப்பத்தானே—புகை
வண்டி நாம் விடுகின்றோம்.

●

மினி ஸ்கேட்டை விட்டிடுங்கள்—நாம்
அன்ன நடையைப் பார்க்க மாட்டோம்
ரைட் ஸ்கேட்டை விட்டிடுங்கள்—நாம்
சின்ன இடையை பார்க்க மாட்டோம்.

●

காலை மறைத்து வாருங்கள்—நாம்
கண்ணியமாய் நடக்கின்றோம்—மார்
கச்சை தெரிய உடுத்தாதீர்
கச்சிதமாய் நடந்திடுவோம்.

சி. எ. செ[illegible]

## யோகியின் பெருமை

யோகி ஒருவர் சாதுவிடம் வந்து, 'நான் வானிலே பறப்பேன்! நீரிலே நடப்பேன், பூமிக்கடியில் நீண்ட நாள் உயிருடன் இருப்பேன்' என்று தன் பெருமைகளை எடுத்துரைத்தான். சாது இதைக் கேட்டு, "நண்பரே! பறவைகள் வானில் பறக்கின்றன. புழுக்கள் பூமிக்கடியில் நெடுநாள் வாழ்கின்றன. மீன்கள் நீரில் நீந்துகின்றன. விலங்குகளும் ஜீவராசிகளும் செய்யும் இச் செயல்களைச் செய்வதில் என்ன பெருமை? அன்பிலே, கருணையிலே, பொறுமையிலே இறைவனைப்போல் இருக்க முயற்சி செய்யுங்கள். இதுவே நம் போன்ற மனிதர்களுக்குள் பெருமை தரக்கூடியது. இதனை விடுத்து நம்மிலும் கீழான ஜீவராசிகளைப் போலிருக்க முயல்வது அறியாமையாகும்" என்றார்.

யோகி வெட்கத்தால் நாணித்தலை குனிந்தார். நாமும் எமது வாழ்வில் சில வேளைகளில் இதே போன்ற வீண் பெருமைக் கடிமையாகின்றோம். என்னே! எமது அறியாமை.

—பேறு.

## எங்கள் அறிமுகம்

இன்றைய இளைஞர் குலம் இலைமறைகாயாய் வாழ்ந்து வருகிறது! சாதனை பல புரிகிறது. ஆனால், வெளிச் சொல்லவோ வெட்கம். வெட்கத்தை விடுத்து வெளிச் சொன்னால், "தலைக்கனம் பிடித்தவன், தன்னைப் பற்றித் தானே பறை சாற்றிக் கொள்கிறான்" எனப் பட்டம் சூட்டி விடுகிறது பாழும் உலகம். உலகத்தின் இச்சிறுமதிச் சிந்தனையையும், தம்மை இவ்வுலகினிற்குக்காட்ட விரும்பும் இளைஞர்களின் இதய எண்ணத்தையும் புரிந்து கொண்ட பாதுகாவலன் "இளைஞர் உலகினிலே" "எங்கள் அறிமுகம்" எனுமோர் பகுதியை ஆரம்பித்தது பாராட்டத்தக்கது.

க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை இவ்வருடம் எழுதப் போகும் எனக்கு வயது பதினாறு. நான் கலையையும், தமிழையும் என் இரு கண்களாகக் கருதி வருகிறேன். தமிழ்ப்பற்று மிகக் கொண்ட நான் பாடசாலையில் நடைபெற்ற கதை, கட்டுரைப் போட்டிகளில் பங்குபற்றிப் பல பரிசில்களையும், பாராட்டுப் பத்திரங்களையும் பெற்றுள்ளேன். இது தவிர பொழுதுபோக்காக 'வளர்மதி' எனுமொரு கலை இலக்கிய கையெழுத்துப்பிரதியொன்றையும் நண்பர்களினுதவியுடன் மாதந்தோறும் வெளியிட்டு வருகிறேன். ஈழத்துக் கலைஞர்கள் பலர் இதற்குப் பேட்டி, கதை, கட்டுரை, கவிதைகள் அளித்து ஊக்கமளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.


கலையில் எனக்கு நல்ல ஈடுபாடுண்டு. அதுவும் நாடகக் கலையென்றால் எனக்கு உயிர். நான் பல நாடகங்கள் எழுதியும், நடித்தும் இருக்கிறேன். நான் எழுதிய நாடகமொன்று தமிழ்த் தின விழாவில் பங்குபற்றி பரிசும் பெற்றிருக்கிறது.

சமூக சேவை செய்வதும், சமயப்பணி புரிவதும் என் வாழ்வின் இலட்சியங்கள். அதைத் தற்பொழுது மேற்கொள்ள விடாது படிப்பு தடைசெய்த போதிலும் படிப்பு முடிந்தபின் அப்பணிகளை மேற்கொள்வதற்காகத் தற்போதே மரியாயின் சேனை போன்ற பல பணிகளில் பங்குபற்றி என் இலட்சிய மாளிகையைக் கட்டியெழுப்ப அத்திவாரமிட்டு வருகிறேன்.

என் கனவுகள் நனவாக மனக்கோட்டைகள் மண் கோட்டைகளாகி விடாது எல்லாம் வல்ல இறைவன் காப்பாராக.

ஜெ. சகாயசீலன் பெர்னாண்டோ (சிராஹி)

## மேற்றிராணித்துவ அபிஷேக 6-வது வருட நிறைவு



திருமலை–மட்டுநகர் துணை ஆயர் மாண்புமிகு வி. தியோகுப்பிள்ளை அவர்கள் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்ட 6—வது வருட நிறைவுதினம் எதிர்வரும் 11-5-71 ஆகும். அன்னாரின் மேற்பார்வையில் கிழக்கு மாகாணத்தின் மறைவளர்ச்சி பல்லாற்றானும் வளர்ந்து வருகின்றது. இந்நன்னாளில் இறைவன் நீண்ட ஆயுளை மாண்புமிகு ஆயர் அவர்களுக்கு நல்க வேண்டுமென இறைஞ்சுவதுடன், அவரின் பராமரிப்பில் நல்ல மந்தைகளாக விசுவாசிகள் அனைவரும் விளங்கவேண்டுமெனவும் வேண்டுவோமாக.

ஏ. டபிள்யு. ஏ.

## நான்கு சுவர்கள்

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கையும் அருங்குணமாய் அமைந்த பெண்களைக் காண்பதே அரிது என்று சிலர் இன்றைய உலகத்தில் முறுமுறுக்கின்றனர். ஆண்கள் வெட்கப்படும்படியாக அதாவது, பெண்கள் நாணமடைவதற்குப் பதிலாக, ஆண்களே அவர்களின் செயல்களைக் கண்டு வெட்கப்படும்படியான காலமாம்இது. எவ்வளவோபேர் கூறுகிறதை நானும் கேள்விப்படாமலில்லை. நங்கையரே! கேட்டீர்களா இந்தக் கூற்றை?

ஒரு வீட்டுக்கு நான்குசுவர்கள் வேண்டும்; அவ்வண்ணமே பெண் எனும் உயிர்க்கூட்டிற்கும் இந்நான்கு குணங்கள்தான் சுவர்களாக இருக்க வேண்டும்; இதில் ஒன்றில்லாவிட்டால் அங்கு முழுமையிராது. படிப்பு வேண்டுந்தான்—அது பண்பை இழக்கிறதாக வேண்டாம்— அழகு வேண்டாம் என்று நான் சொல்லவில்லை சோதரியே; அதில் ஆடம்பரம் வேண்டாம்; நாகரிசம் வேண்டுந்தான் நங்கையரே; அதில் நாசப்படுத்தும் நாட்டம் அதிகம் வேண்டாமே; எப்போதும் இனிய முகமும், இன் சொல்லும் போதுமே; உண்மையில் இப்போதுள்ள பெண்கள் கல்வித்துறையில் மிகவும் முன்னேறியுள்ளனர்; அதனால் அவர்கள் நாலுபேருடன் சரிசமமாக இருந்து பழகத்தான் விரும்புவர். இது இயற்கை. ஆனால் ஒன்று, இதற்காகத் தலைக்கனத்தோடு எடுத்தெறிந்து பேசுவது, தனது பேச்சுத்திறமையை வெளிக்காட்ட அடக்கமில்லாது இரைவது இவையெல்லாம் விரும்பத்தக்கதல்ல, விரும்பவும் மாட்டார்கள். எனவே பெண்ணே! உனது கவசமான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு இவற்றை நீ அணிந்து, உன்னையே நீ அறிந்து, உவகையுடன் வாழ்வாயாக.

செல்வி கிறேஸி அன்றனி

## இவர்களுக்கு ஒரு சபாஸ்!

இளவாலை புனித யாகப்பர் பங்கு ஆலய பாடற்குழுவினர் அங்கு நடைபெற்ற முதற்திருப்பலி விழாவின் போது இசைத்த இசை அவ் விழாவிற்குச் சமூகமளித்த வெளியூர்க் குரவர்களையும் பெரியோரையும் நன்கு கவர்ந்து விட்டது. யாழ் மேற்றிராசனத்தில் மட்டுமல்ல இலங்கையின் வேறு எந்தப் பிரிவிலும் இப்படியான சிறந்த ஒரு பாடற்குழுவினரைக் காணமுடியாது என்று பலரும் இளைஞர் உலகிற்குத் தெரிவித்துள்ளனர்.

—பேறு.

— அப்பலோ-16 விண்வெளி வீரர்கள் மூவரும் இதற்குமுன் வேறு எந்த மனிதரும் சாதித்திராத வகையிலே சந்திரத்தரையில் மிக நீண்ட நேரம் தங்கியிருந்து ஆராய்ச்சிகள் நடத்திய பின் விலைமதித்தற்கரிய புதிய சந்திரக்கற்பாறைகளையும், மண், மணற்பொடிகளையும் தங்களுடன் கொண்டு அங்கிருந்து 66 மணி நேரம் அண்டவெளியில் பிரயாணஞ் செய்தபின் பூமிக்குத் திரும்பியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஇருதயக் கூட்டம்

நிகழும் வைகாசித் திங்கள் 6-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வண. பிதா B. A. யோண் O. M. I. யாழ்ப்பாணம் புனித ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் ஆங்கிலத்தில் ஓர் உரை நிகழ்த்துவார். எல்லோரும் அன்பாக அழைக்கப்படுகின்றனர்.

புத்தகமதிப்புரை

## சுட்ட பொன்

திருமலை—மட்டுநகர் ஆயர் மாண்புமிகு இக்னேஷியஸ் கிளெனி, யே. ச. ஆண்டகை அவர்கள் தமது மேற்றிராணித்துவ வெள்ளிவிழாவை எதிர்வரும் புரட்டாசித்திங்கள் கொண்டாட இருக்கின்றார்கள். இதனை முன்னிட்டு ஆயர் அவர்களிடம் கொண்ட அன்பின் பெருக்கினை வெளிக்காட்டுமுகமாக இந்நூலை வெளியிட்டுள்ளார்கள் என்பதனை ஆசிரியரின் முன்னுரைமூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

பாரதியார் கண்ணனைப் பல்வேறு கோணத்தில் வைத்துப் பார்ப்பதுபோல், வாகரைவாணன் அவர்களும் ஆயர் அவர்களின் பண்புகளை தாய், சேவகன், காதலி, சான்றோன், தலைவன், நல்லாயன் போன்ற பல்வேறுதலைப்பின்கீழ் வெளியிடுவது படிப்பதற்குச் சுவையுடையதாக உள்ளன. எடுத்துக்காட்டாக,

காதலி என்றபகுதியில்:

**இளெளி என்றுபேரம் —எங்கள்**
**கிறிஸ்து மதம் தானும்**
**குழலோசை மொழியில் —தலை**
**குனிந்தபடி சொன்னுள்**
**மழைமேகக் காட்டுள் —மறைந்த**
**மதியம் அதைப்போல**
**அழகியவள் தோற்றம் —அடடா**
**யாருக்கது கிட்டும்?**

தாயென்ற பகுதியில்:

**குப்பைகளைக் கிளறிக்**
**குஞ்சுகளுக் குணவு**
**தப்புதல் இன்றித் தரும்**
**தாய்க்கோழி தன்னை**
**ஒப்ப நீ உள்ளாய்**
**உலகமிது அறியும்**
**எப்போதும் கோயிலுள்**
**எரிகின்ற தீபம் நீ"**

என்பனபோன்ற பல பாடல்கள் உள்ளன.

கவிஞர் வாகரைவாணன் காவலன் வாசகர்களுக்குப் புதியவரல்ல. திருமலை—மட்டுநகர் துணைஆயர் மாண்புமிகு வி. தியோகுப்பிள்ளை அவர்களின் வாழ்த்துரை, சென்னை பச்சையப்பன் கல்லூரி தமிழ் போராசிரியர் திரு. இரா. குமரவேலன் அவர்களின் அணிந்துரை ஆகியவற்றுடன் அழகான முறையில் தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டுள்ள இந்நூல் அனைவரும் படித்துப் பயன்பெறவேண்டிய ஒன்ருகும். இத்தகைய அழகாக அச்சிடப்பட்ட நூலை 1ரூபாவிற்கு விற்கமுனைந்த ஆசிரியரை உண்மையிலேயே பாராட்டுவதுடன், இந்நூலை வாங்கி அவருக்கு ஆதரவும், உற்சாகமும் நல்குதல் நம்மெவ்வொருவரின் கடமையாகும்.

இதன்மூலம் திருமறைக் கருத்துக்கள் அடங்கிய பல கவிதை நூல்களை ஆசிரியர் வெளியிட முன்வருவார் என்பது உறுதி.

## சமயசம்பந்தமான சஞ்சிகைகள்

சமய சம்பந்தமான சஞ்சிகைகளை இலங்கையிலே இறக்குமதிசெய்ய அனுமதி வழங்கப்படும். தமிழ்ச் சஞ்சிகைகளின் இறக்குமதிக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் காரணமாகச் சமயசம்பந்தமான சஞ்சிகைகள், பத்திரிகைகளின் இறக்குமதியும் தடைசெய்யப்பட்டிருந்தது. ஆனால், சமய ஸ்தாபனங்களும், மற்றும் சமயப் பிரமுகர்களும் செய்த வேண்டுகோளின் பேரிலே அவைகளை இறக்குமதி செய்வதற்கிருந்த தடையை அரசாங்கம் தளர்த்தியிருக்கிறது.

## பெண்களுக்கு ஆலோசனை

நீங்கள் வெளியில் செல்லும்போது அதிகமான நகைகளை அணிந்து கொண்டு செல்ல வேண்டாம்; ஏனெனில், திருடர்களின் திருட்டு முயற்சிக்கு இதுவும் ஒரு காரணமாகும்; தேவைக்கு அதிகமான நகைகளை அணிந்து செல்வதால் அவைகளைப் பார்க்கிறவர்களுக்குத் திருட்டு எண்ணம் சுயமாக ஏற்படுகிறது; அத்துடன் யாரிடம் அதிகமான நகைகள் உள்ளன என்பதையும் திருடர்கள் இலகுவில் அறிந்து கொள்ளுகிறார்களென்று வடபகுதிப் பொலிஸ் அதிபர் பெண்களுக்கு ஆலோசனை கூறியிருக்கின்ருர்.

## கல்லூரி நூற்ருண்டு விழா

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் நூற்ருண்டு விழா வருகிற ஆவணி மாதம் கொண்டாடப்படவிருக்கிறது. இந்தவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுமுகமாகக் கல்லூரி அதிபக் வண. ஈ. அல்விறெட் பெஞ்சமின் அடிகளாரும், பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆசிரியர் எஸ். ஏ. ஈ. இரத்தினராஜா அவர்களும் தீவிர முயற்சி எடுத்துவருகிறார்கள். கல்லூரியின் வளர்ச்சியை மேலும் விரிவுபடுத்திப் புதிய கல்வித் திட்டத்துக்கமைய மின்சார, இயந்திர, உலோக, மரவேலைகளைப் பயிற்றுவிக்கும் தொழிற்கூடம் ஒன்றை அமைத்து ஒரு தொழில் நுட்பப் பாடசாலையை ஆரம்பிப்பதற்காகப் பழைய மாணவர்களிடமும், பெற்ருேரிடமும் நிதிசேகரிக்கவிருக்கின்ருர்கள்.

## உடற்பயிற்சிப் போட்டிகள்

அகில இலங்கைப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகள் இந்த வைகாசி மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளிலே யாழ்ப்பாணம் துரையப்பா அரங்கில் நடைபெறவிருக்கின்றன. இரண்டாம் நாள் போட்டி விழாவில் கல்வி மந்திரி பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார். போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு அவர் பாரியார் பரிசில்களை வழங்குவார். இப்போட்டிகளில தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் 5,000 மாணவர்கள் கலந்து கொள்ளவிருக்கிருர்கள்.

# செய்திகள்

## நவீன சந்தைத் திறப்பு விழா

யாழ்ப்பாண நகரில் அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தையை இந்த வைகாசி மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை அரசாங்க பொது நிர்வாக—உள்நாட்டு, உள்ளூராட்சி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா திறந்து வைப்பாரெனத் தெரியவருகிறது.

## பௌர்ணமி தினமும் கள்ளும்

யாழ்ப்பாணத்திலே பௌர்ணமித்தினத்தன்று இறக்கப்படும் கள் முழுவதும் சாராய வடிசாலைக்கு அனுப்பப்படும். பனையில் சாராயவடிசாலையை அமைப்பதற்கான யந்திரசாதனங்கள் தயாராயிருக்கின்றன. வடிசாலையை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. இந்தச் சாராயவடிசாலை அமைக்கப்படும்வரையிலே இங்கு இறக்கப்படும் கள்ளு மபுரலர்மூலம் கழுத்துறைச் சாராயவடிசாலைக்கு அனுப்பப்படும். பௌர்ணமிநாட்களில் கள்ளுத்தவறணைகள் மூடப்பட்டிருக்கும். அதனுல் அன்று இறக்கப்படும் கள்ளு முழுவதும் சாராய வடிசாலையில் பயன்படுத்தப்படும்.

## கல்விமந்திரியின் விஜயம்

கல்விமந்திரி டக்றர் பதியுதீன மஹ்மூத் முதன்முறையாக இம்மாதம் 11ஆம்திகதியன்று யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக விஜயஞ் செய்யவிருக்கின்ருர். அவர் அன்று காலை விமானமூலம் பலாலி விமானநிலையம்வந்து சேர்ந்து 14ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பார். 14ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை மாணவர் உடற்பயிற்சிப்போட்டியில் அவர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அவர் இங்கு தங்கியிருக்கும்போது இருபது பாடசாலைகளுக்குமேல் பார்வையிடுவார். இங்குள்ள ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளையும் தரிசிப்பார். யாழ்ப்பாண மாநகரசபை, பருத்தித்துறை நகரசபை ஆகியன அவருக்குப் பொதுவரவேற்பளிக்க ஆயத்தப்படுகின்றன.

## மேதினக் கொண்டாட்டம்

மேதினக் கொண்டாட்டம் இம்முறையும் மிக அமைதியாக நடைபெற்றன. தொடர்ந்து இரண்டாம் முறையாக இவ்வருடமும் ஊர்வலங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டது. மேதினக் கூட்டங்கள் மண்டபங்களுக்குள் மட்டும் நடத்தப்பட்டன. அவற்றில் பாவிக்கப்பட்ட ஒலிபெருக்கிகளும் மண்டபங்களுள் மட்டும் கேட்கக்கூடியதாய்ப் பூட்டப்பட்டிருந்தன. அவசரகாலநிலைமை நடைமுறையில் இருப்பதே இவற்றிற்கெல்லாம் காரணமாகும்.

## ஆள்பதிவு அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணக் காரியதிகாரி பிரிவில் ஆள்பதிவு அடையாள அட்டைக்கான முதல்விண்ணப்பப்பத்திரத்தை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. விமால் அமரசேகரா பெற்றுக்கொண்டார். அதிலிருந்து இப்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தின் சகலகாரியாதிகாரிகள் பிரிவுகளிலும் இந்தவிண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், புகைப்படம் பிடிக்கும் வேலைகள் இந்த வைகாசிமாத முடிவுக்குள் ஆரம்பமாக விருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குற்றச்செயல் குறையுமா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் தவறணைமுறை நடைமுறைக்கு வந்திருப்பதால் குற்றச்செயல் குறைவதற்கு வழிபிறக்குமென்றும், கண்ட இடங்களிலும் இருந்துவந்த கள்ளுக் கொட்டில்களுக்குள் புகுந்து குடிக்கும் வாய்ப்புக் கிடையாமையால் மாணவர்கள் கெட்டழியும் சந்தர்ப்பங்கள் தவிர்க்கப்படுமெனவும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர்.

## பாடநூல்களும் பரிசுகளும்

பாடசாலைகளுக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்களை எழுதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குப் பரிசுகள் வழங்கக் கல்விமந்திரி நடவடிக்கை எடுத்து வருகிருர். நாட்டின் கல்வித்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நூல்களை எழுதுவதற்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைத் தூண்டுமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## மகாவலிகங்கைத் திட்டம்

மகாவலிகங்கையைத் திசை திருப்பும் முதலாவது கட்டத்துக்கு எட்டுக்கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. போவதன்னைத் திட்டமாகிய இதன் முதலாவது கட்டத்தில் ஓர் அணைக்கட்டு அமைப்பது, சுரங்கம் தோண்டுவது, நீர்ப்பாசனக் கால்வாய்கள் வெட்டுவது ஆகியன அடங்கும். வருகிற வைகாசி மாதம் ஆரம்பிக்கப்படும் இத்திட்டம் 1974ஆம்ஆண்டு ஆடி மாதம் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கட்டம் முடிவடைந்ததும் மகாவலிகங்கைத் தண்ணீர் வடமத்திய மாகாணத்துக்குக் கிடைக்கும்.

## முத்துச் சிப்பி ஆராய்ச்சி

மன்னூரைச் சேர்ந்த சிலாவத்துறை, முள்ளிக்குள ஆழ் கடல்களில் கடற்தொழில் திணைக்கள உத்தியோகஸ்தர்கள் நடத்திய முத்துச் சிப்பி பற்றிய பரிசோதனையின் முடிபாக அப்பகுதிகளில் முத்துச் சிப்பிகள் பெருமளவில் காணப்படவில்லையெனத் தெரியவந்துள்ளது. கடந்த காலங்களிலே அப்பகுதிகளில் ஏற்பட்ட சூருவளியாலும், கடற் கொந்தளிப்பாலும் முத்துச் சிப்பிகள் மணலால் மூடப்பட்டிருக்கலாமென்று கருதப்படுவதால் தொடர்ந்து ஆராய்ச்சி நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## பைக்கற்றுகளில் அரிசி

பைக்கற்றுகளில் போட்டு அடைக்கப்பட்ட அரிசியை விற்பனை செய்ய நெற்கொள்வனவுச்சபை நடவடிக்கை எடுத்து வருகிறது. பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டுள்ள இந்தச் சாதாரண அரிசி ஒரு கொத்து 1ரூபா 35சதமாகவும், சம்பா அரிசி ஒரு கொத்து 1ரூபா 60சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

## கறிஉப்புத் தயாரிப்பு

யாரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலே கறிஉப்பு (மேசைஉப்பு) தயாரிக்கும் புதிய கட்டடம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. தற்போது நாட்டிற்குத் தேவைப்படும் கறிஉப்பை உற்பத்தி செய்வதே இந்தப் பிரிவின் நோக்கமாகும். இதற்கெனப் புதிய இயந்திர வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுப் புதிய கட்டடத்தில் உற்பத்தி ஆரம்பமாகியிருக்கிறது.

* * *

— தங்கள்பதினெருநாள் சந்திரப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு ஆப்பலோ-16 விண்வெளிவீரர்கள் மூவரும் சென்ற 27ஆம் திகதி வியாழக்கிழமை பசிபிக் சமுத்திரத்தில் சேமமாக வந்திறங்கினுர்கள். மூவரும் நல்ல சுகமாக இருப்பதாக அவர்களைப் பரிசோதித்த டக்றர்மார் அறிவித்திருக்கிருர்கள்.

— அப்பலோ-16 விண்வெளி வீரர்கள் மூவரும் பசிபிக் சமுத்திரத்தில் வந்திறங்கிய 40 நிமிஷங்களின்பின் விண்வெளிக் கலத்திலிருந்து ஹெலிகொப்றர் மூலம் தூக்கியெடுக்கப்பட்டனர். இவர்களைப் பாராட்டுமுகமாகத் தாய்க்கல விமானியான மெட்டிங்லி விமானப்படைத் தளபதி பதவியும், மற்றிருவரும் கடற்படைத்தள பதவியும் அமெரிக்க ஜனதிபதியால் சன்மானிக்கப் பெற்றிருக்கிருர்கள்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

1969ஆம் ஆண்டு என்னைப் பீடித்த நோயால் கஷ்டப்பட்டுச் சகல வைத்தியராலும் கைவிடப்பட்டுத் துன்பமுறும் வேளையில் சதாசகாயமாதாவுக்கும், புனித யூதாததேயு அப்போஸ்தலருக்கும் விண்ணப்பம் செய்தேன். அவர்களுடைய வேண்டுதலால் எல்லாம் வல்ல இறைவன் என்மீது இரக்கம் கொண்டார். இன்னும் பூரண சுகமாகாமையால் அன்பர்கள் அனைவரும் சதாசகாயமாதா, புனித யூதாததேயுவின் உதவியைக் கொண்டு எனக்குப் பூரண சுகம் கிடைக்கும்படி இறைவனை வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சருவேசுரனுக்கு ஸ்தோத்திரம்,
வியாதியில் துயருறும்,
கட்டைக்காடு பிலிப்பு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20 ஆம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம்ஆண்டு வைகாசி மாதம் 6-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது; தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300: தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org